**ஒன்பதாம் வகுப்பு : முதற்பருவம்**

**தமிழ்-முதல் தாள் : வினா - விடைகள்**

**இயல் -1**

**திராவிட மொழிக் குடும்பம்**

**1.பலமொழிகள் எவ்வாறு உருவாயின?**

மனித இனம் வாழ்ந்த இடஅமைப்பும் , இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின.

**2.இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை யாது?**

1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன.

**3.நான்கு வகை மொழிக்குடும்பங்கள் யாவை?**

1.இந்தோ - ஆசிய மொழிகள்

2.திராவிட மொழிகள்

3.ஆஸ்திரோ ஆசிய மொழிகள்

4.சீன - திபெத்திய மொழிகள்

**4.இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச.அகத்தியலிங்கம் குறிப்பிடக் காரணம் யாது?**

1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன.நான்கு வகை மொழிக் குடும்பங்களாக இவற்றைப் பிரிக்கின்றனர். மேலும், இங்குப்பல கிளைமொழிகள் பேசப்படுவதால் இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச.அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

**5.தமிழ் என்ற சொல் குறித்து ஹீராஸ் பாதிரியார் கூறுவன யாவை?**

தமிழ் என்ற சொல்லில் இருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது என்பதை ஹீராஸ் பாதிரியார், தமிழ் – தமிழா – தமிலா – டிரமிலா – ட்ரமிலா – த்ராவிடா – திராவிடா என்று விளக்குகிறார்.

**6.பிரான்சிஸ் எல்லிஸ் குறிப்பிடும் தென்னிந்திய மொழிகள் யாவை?**

1.தமிழ் 2.தெலுங்கு 3.கன்னடம் 4.மலையாளம்

**7.ஹோக்கன் குறிப்பிடும் தமிழியன் மொழிகள் யாவை?**

1.தமிழ் 2.தெலுங்கு 3.கன்னடம் 4.மலையாளம்

5.மால்தோ 6.தோடா 7.கோண்டி

**8.கால்டுவெல் வெளியிட்ட ஒப்பிலக்கண நூலின் பெயர் யாது? அது வெளியிடப்பட்ட ஆண்டு யாது?**

1856ல் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஒப்பிலக்கண நூலை கால்டுவெல் வெளியிட்டார்.

**9.கால்டுவெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளை ஆய்வு செய்தோர் யாவர்?**

ஸ்டென்கனோ,கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி , பரோ , எமினோ ,கமில் சுவலபில் ,ஆந்திரனோவ் ,தெ.பொ.மீனாட்சி சுந்தரம்.

**10.திராவிட மொழிகளின் வகைகள் யாவை?**

தென் திராவிட மொழிகள்,

வட திராவிட மொழிகள் ,

நடுத் திராவிட மொழிகள் - என மூன்றாகத் திராவிட மொழிகளை வகைப்படுத்துவர்.

**11.தென் திராவிட மொழிகள் யாவை?**

தமிழ் , மலையாளம், கன்னடம் , குடகு , துளு , கோத்தா, தோடா, கொரகா , இருளா.

**12.நடுத் திராவிட மொழிகள் யாவை?**

ச. சேட்டு மதார்சா, எம்.ஏ, எம்.ஏ,எம்.ஏ, எம்.பில், டிபிடி, பி.எட், பி.எச்.டி, பிஜிடிடிஆர், யுஜிசி-நெட்., பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.

ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001.அலைபேசி: 9994142883 , 8883681115

தெலுங்கு, கூயி,கூவி,கோண்டா ,கோலாமி, நாய்க்கி, பெங்கோ, முண்டா, பர்ஜி ,கதபா, கொண்டி,கோயா.

**13.வட திராவிட மொழிகள் யாவை?**

குருக் , மால்தோ , பிராகுய்

**14.திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை?**

1.திராவிடமொழிகளின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளது.

சான்று: கண் - தமிழ் , கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு , குடகு.
∴கன்-குருக்.

2.திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.

சான்று: மூன்று - தமிழ் , மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி -துளு.

3.திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் குறில் - நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்துகின்றன.

சான்று: அடி- குறில் , ஆடி - நெடில்

www.Padasalai.Net

**15.தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

1.தொன்மை,இலக்கண-இலக்கிய வளம் உடையது தமிழ்.

2.இலங்கை,மலேசியா,சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.

3.பிற திராவிட மொழிகளை விட தனித்த இலக்கணவளத்தைக் கொண்டு தனித்தியங்கும் மொழி தமிழ்.

4.பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி தமிழ்.

5.திராவிட மொழிகள் சிலவற்றிற்குத் தாய்மொழி தமிழே.

6.ஒரு பொருளைக் குறிக்க பல சொற்கள் வழங்கும் மொழி தமிழ்.

7.பெரும்பாலான இந்தியக் கல்வெட்டுகளில் பழமையானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

**16.நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

நாங்கள் பேசும் மொழி தமிழ். அம்மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிகள் வகையைச் சேர்ந்தது.

**17.திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

தென் திராவிட மொழிகள்,

வட திராவிட மொழிகள் ,

நடுத் திராவிட மொழிகள் - என மூன்றாகத் திராவிட மொழிகள் பிரிவைப் பிரிப்பர்.

**தமிழ் மொழியின் சிறப்பியல்புகள்:**

1.தொன்மை,இலக்கண-இலக்கிய வளம் உடையது தமிழ்.

2.இலங்கை,மலேசியா,சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.

3.பிற திராவிட மொழிகளை விட தனித்த இலக்கணவளத்தைக் கொண்டு தனித்தியங்கும் மொழி தமிழ்.

4.பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி தமிழ்.

**18.மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

மூணு - மலையாளம்,
மூடு - தெலுங்கு,
மூரு - கன்னடம்,
மூஜி -துளு.

**19.திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது.

2.தமிழ் என்ற சொல்லில் இருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது என்பதை ஹீராஸ் பாதிரியார், தமிழ் – தமிழா – தமிலா – டிரமிலா – ட்ரமிலா – த்ராவிடா – திராவிடா என்று விளக்குகிறார்.

**ச. சேட்டு மதார்சா, எம்.ஏ, எம்.ஏ,எம்.ஏ, எம்.பில், டிபிடி, பி.எட், பி.எச்.டி, பிஜிடிடிஆர், யுஜிசி-நெட்.,** பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.

ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001.அலைபேசி: 9994142883 , 8883681115

3.பிரான்சிஸ் எல்லீஸ் தமிழ் , தெலுங்கு , கன்னடம் , மலையாளம் ஆகியன ஒரே இனம் என்றார்.

4.ஹோக்கன் , மாக்சுமுல்லர் ஆகியோர் திராவிடமொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டன என்றனர்.

5.கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் திராவிடமொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டன என்றார். சமஸ்கிருதத்திற்குள்ளும் திராவிட மொழிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்றார்.

## தமிழோவியம்

**1.தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.**

“காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்த

காலமும் நிலையாய் இருப்பது தமிழே!”

**2. அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை**

**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்**

- இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் அகப்பொருள் , புறப்பொருள் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

**3.உலகத்தாய்மொழி நாள் எது?**

பிப்ரவரி 21

**4.தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட நாடுகள் எவை?**

இலங்கை , சிங்கப்பூர்

**4.ஈரோடு தமிழன்பன் குறிப்பு வரைக.**

1.சிறுகதை . புதுக்கவிதை முதலிய படைப்புகள் வெளியிட்டுள்ளார்.

2.ஹைக்கூ , சென்ரியு , லிமரைக்கூ முதலிய புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.

3.2004ல் அவரின் வணக்கம் வள்ளுவ நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது.

4.தமிழன்பன் கவிதைகள் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது.

**5.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்களிப்பை விளக்குக.**

1. தமிழில் உள்ள அறிவியல் செய்திகளை மேலும் வெளிக்கொணர்வோம்.

2.கன்னித் தமிழ் மாறாது கணினித் தமிழ் ஆக்குவோம்.

3.அயல்மொழி மோகம் கொண்டு திரிவோரை அன்னைத் தமிழ் மோகம் கொள்ள வைப்போம்.

## தமிழ்விடு தூது

**1.கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டு இரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை கண்ணி. அதே போல் இரண்டு இரண்டு அடிகளை வைத்து எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் கண்ணி ஆகும்.

**2.நா இற்று விழும் - எப்போது?**

தமிழே ! சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.

**3.தூது இலக்கியத்தின் வேறு பெயர்கள் யாவை?**

1.வாயில் இலக்கியம் 2.சந்து இலக்கியம்

**4.தூது இலக்கியம் குறிப்பு வரைக.**

தலைவன் மீது அன்பு கொண்ட தலைவி ஒருத்தி , தலைவனிடம் தூது அனுப்பி மாலை வாங்கி வருமாறு அன்னம் முதலிய 10 பொருள்களில் ஏதேனும் ஒன்றினை தூது அனுப்புவது தூது இலக்கியம் ஆகும். இது கலிவெண்பாவால் பாடப்படும்.

**ச. சேட்டு மதார்சா, எம்.ஏ, எம்.ஏ,எம்.ஏ, எம்.பில், டிபிடி, பி.எட், பி.எச்.டி, பிஜிடிடிஆர், யுஜிசி-நெட்.,** பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.

ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001.அலைபேசி: 9994142883 , 8883681115

**5.தமிழ்விடுதூது - குறிப்பு எழுதுக.**

1.மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி , தன் காதலைக் கூறிவர தமிழைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.

2.268 கண்ணிகளை உடையது.

3.1930ல் முதன் முதலில் இந்நூலைப் உ.வே.சா பதிப்பித்தார்.

4.ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

**6.தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

1.அமிழ்தினும் மேலான முத்திக் கனியே! முத்தமிழே! உன்னோடு மகிழ்ந்து சொல்லும் விண்ணப்பம் உண்டு. கேள்.

2.புலவர்கள் குறம் , பள்ளு பாடி தமிழிடமிருந்து சிறப்பு பெறுகின்றனர். அதனால் உனக்கும் பாவகைக்கும் உறவு உண்டா?

3.தமிழே ! சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.

www.Padasalai.Net

4.தேவர்கள் கூட மூன்று குணங்கள் தான் பெற்றுள்ளனர். ஆனால் தமிழே! நீ மட்டுமே பத்து குணங்களைப் பெற்றுள்ளாய்!

5.மனிதர் உண்டாக்கிய வண்ணங்கள் கூட ஐந்து தான். ஆனால் தமிழே! நீ மட்டுமே 100 வண்ணங்களைப் பெற்றுள்ளாய்!

6.உணவின் சுவையோ ஆறு தான். ஆனால், தமிழே ! நீயோ ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்!

7.மற்றையோர்க்கு அழகு ஒன்று தான் , ஆனால், தமிழே ! நீயோ 8 வகையான அழகினைப் பெற்றுள்ளாய்!

**ச. சேட்டு மதார்சா, எம்.ஏ, எம்.ஏ,எம்.ஏ, எம்.பில், டிபிடி, பி.எட், பி.எச்.டி, பிஜிடிடிஆர், யுஜிசி-நெட்.,** பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.

ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001.அலைபேசி: 9994142883 , 8883681115